பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 07 வியாழக்கிழமை 23.11.2023 கதிர் 377

# தமிழ் எம்.பிக்கள் இரட்டை வேடம்

## குத்திக்காட்டியது மக்கள் முன்னணி

சுமந்திரன், சாணக்கியன் தவிர்ந்த தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்களும், ஜனநாயக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினர்களும், விக்னேஸ்வரனும் வரவு,செலவுத்திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் பங்கேற் காமையானது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வெள்ளையடிக்கின்ற செயற்பாடாகவே உள்ளதென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார். ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

இன்று என் மனதை நெருடிய ஒ-ரு சிறு விடயத்தை மட்டும் மட்-டுமே வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ளப் போகின்றேன்.

இது கார்த்திகை மாதம். மக்களுக்காகத் தங்கள் இன்னுயிர்களை ஈகம் செய்தவர்களை நினைவு கூரும் மாதம். பல்வேறு இடர்பாடுகள். தடைகளுக்குப்பின்னர் இந்தமாதத்தில் மாவீரர்களைநினைவுகூருவதற்கான வெளியை தமிழ்ச் சமூகம் ஒரு சிறு அளவிலாவது மீட்டெடுத்துள்ளது என்றேதோன்றுகின்றது. ஆங்காங்கே மாவீரர் வாரத்தையொட்டி நடக்கும் நிகழ்வுகள் அதைத்தான் பறை சாற்றுகின்றன.

இந்தத் தருணத்தில் ஆயுதப் போராட்டமும் எமது அரசியல்வாதிகளும் பற்றி எனது எண்ணங்கள் அசை போடுகின்றன.

நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர்கள் நினைவாலயத்தில் ☞2

## ஜனாதிபதிக்கான நிதி ஒதுக்கீடு நிறைவேற்றம்

2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் ஜனாதிபதிக்கான நிதி செலவினங்களுக்கான ஒதுக் கீட்டுக்கு ஆதரவாக 62 வாக்குகளும் எதிராக 3 வாக்குகளும் அளிக் கப்பட்ட நிலையில் 59 மேலதிக வாக்குகளினால் ஜனாதிபதிக்கான நிதி செலவினங்களுக்கான ஒதுக்கீடு நிறைவேற்றப்பட்டது. ☞2

## 'கார்த்திகை வாசம்' மலர்க் காட்சி நேற்று நல்லூரில் தொடங்கியது





வடக்கு மாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு ஆண்டு தோறும் 'கார்த்திகை வாசம்' என்ற பெயரில் நடத்தப்பட்டுவரும் மலர் கண்காட்சி நேற்றுப் பிற்பகல் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் ஆரம்பமானது.தமிழ்த் தேசியப் பசுமை இயங்கத்தின் ஏற்பாட்டில் தாவர உற்பத்தியாளர்களும் இணைந்து நத்தும் இந்தக் கண்காட்சி இந்த மாதம் 30ஆம் திகதி வரை தினமும் காலை 8:30 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், சமூக அரசியற்செயற்பாட்டாளர் க.அருந்தவபாலன், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 4 வயதில் முன்பள்ளி கட்டாயம் சட்டம் கொண்டுவர அரசு திட்டம்

4 வருடங்கள் பூர்த்தியாகிய சிறுவர்களுக்கு முன் பள்ளிக் கல்வியைக் கட்டாயப் படுத்தும் சட்டம் ஒன்று கொண்டு வரப்படும் என்றுசபைத்தலைவரும் கல்வி அமைச்சருமான கலாநிதி சுசில் பிரேம் ஜயந்த் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் பாராளுமன்றஉறுப்பினர் யதாமினி குனவர்தன எழுப்பிய வாய்மூல கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு ☞2

## 3 நாடாளுமன்ற ஒன்றியங்களுக்கு சபாநாயகர் நேற்று முன்மொழிவு

இலங்கையில் கிரிக்கெட்விளையாட்டை மறுமலர்ச்சிபெறச்செய்வதற்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் உட்பட மூன்று ஒன்றியங்களுக்கு முன்மொழிவுயப்படுவதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அறிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றையதினம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் ஆரம்பமாகியபோதுசபாநாயகர் அறிவிப்பு நேரத்தில் மேற்படி அறிவிப்பு விடுக்கப்பட்டது. ☞8

## உள்ளூராட்சி சபைத் தேர்தலை முதலில் நடத்துங்கள் பார்ப்போம்

### சஜித் நேற்று நாடாளுமன்றில் தெரிவிப்பு

220 இலட்சம் பேரினதும் ஆணை கிடைக்கவேண்டும்என்ற விருப்பம் ஜனாதிபதிக்கு இருந்தால், முதலில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விசேட உரையை அடுத்து பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2019 ஜனாதிபதித் தேர்தல் மற்றும் 2020 பொதுத்தேர்தல் ஆணைகளுக்கு மாறாக நாட்டு மக்களின்உண்மையான ஜனநாயகமே இப்போது முக்கியமானது உயர் நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள வழக்கு எண்ணை தவறுதலாக குறிப்பிடும் போது அதன் உள்ளடக்கத்தைப் பற்றி சிந்திக்காமல் ☞8

## குளியலறையில் கமெரா வைத்த மர்ம நபர் பெரிஸாரால் கைது

யாழ்ப்பானம் இந்து கல்லூரி அருகிலுள்ள நீராவியடி பகுதியில் இரவு நேரங்களில் வீட்டு உரிமையாளருக்கு தெரியாமல் வீட்டிற்குள் புகுந்து குளியல் அறையில் கமரா மூலம் வீடியோக்களை எடுத்து மிரட்டும் மர்ம நபரொருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது

குறித்த நபருக்கு எதிராக சில பெண்கள் சிறுவர் பெண்கள் பொலிஸ்பிரிவில்முறைப்பாட்டை பதிவுசெய்ததன் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

அதற்கமையவே குறித்த சந்தேக நபரை கண்காணிப்பு ☞2

## துப்பாக்கியுடன் ஒருவர் முல்லைத்தீவில் கைது.



முல்லைத்தீவு மாவட்டம், கொக்குளாய் பகுதியில் இடியன் துப்பாக்கியுடன்ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 5 மணியளவில் பொலிஸாரின் சோதனை ☞8

## பிரபாகரன் யார் என்று கேட்கக்கூடிய அரசியல் நிலை 10 ஆண்டுகளில் வரும்

### சீ.வி.கே.சிவஞானம் தெரிவிப்பு



இன்னும் பத்து வருடங்களில் தலைவர் பிரபாகரன் யார் என கேட்கக்கூடிய ☞2

## மனிதச் சங்கிலிப்போராட்டத்தை சிலர் கொச்சைப்படுத்திவிட்டனர்



### அரசியல்:வாதிகள் மீது ஐங்கரநேசன்பாய்ச்சல்

அகிம்சை ரீதியான போராட்டங்களில்மிகவும் வலுவானபோராட்டமான மனிதச்சங்கிலி போராட்டத்தின் அர்த்தத்தினை சில அரசியல்வாதிகள் கொச்சைப்படுத்தி விட்டார்கள் என தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

தமிழ் தேசிய பசுமை இயக்கத்தினால் மரநடுகை மாதத்தை முன்னிட்டு நடாத்தப் படுகின்ற கார்த்திகை வாசம் மலர் கண்காட்சி ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலுடன் எமது ஆயுத போராட்டம் மௌனிக்கப்பட்டது.

அதற்கு பின்னர் நாம் இனி துப்பாக்கி தூக்கி போராடக்கூடிய நிலைமையில் இல்லை, ஆனால் அதற்கு ☞2

காலைக்கதிர் Kalaikkathir

# அதிவேக நெடுஞ்சாலை கடமையில் படையினர்

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஒன்றிணைந்த தொழிற் சங்கம் முன்னெடுத்த பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக அதிவேக வீதியில்பயணச்சீட்டுவிநியோகிக்கும் நடவடிக்கைக்கு முப்படையினர் ஈடுபடுத்தப்பட்டனர்.

அதிவேக வீதி கட்டமைப்பை தனியார் மயப்படுத்துவதற்கான முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து 26 தொழிற்சங்கங்களை சேர்ந்த சுமார் 11,000 உறுப்பினர்கள் இந்த பணிப்பகிஷ்கரிப்பை ஆரம்பித்தனர்.

ஆட்சேர்ப்பு நடவடிக்கை உரிய முறையில் இடம்பெறாமை மற்றும் எஞ்சிய சுகயீன விடுமுறை நாட்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படைமைக்கு இவர்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.

நேற்றுக் காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை முன்னெடுக்கப்பட்ட இந்த பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக அதிவேக வீதியில்பயணச்சீட்டுவிநியோகிக்கும் நடவடிக்கையில் முப்படையினர் ஈடுபடுத்தப்பட்டனர்.

சில இடங்களில் பயணச்சீட்டு இயந்திரங்களை ஊழியர்கள் மறைத்து வைத்திருந்தமையினால் பயணச்சீட்டுகள் வழங்கப்பட வில்லை. சில இடங்களில் கையால் எழுதப்பட்ட பயணச்சீட்டுகள் வழங்கப்பட்டன.

தெற்கு அதிவேக வீதியின் பின்னதுவ நுழைவாயில்களில் இராணுவஉத்தியோகத்தர்களினால் பயணச்சீட்டுகள் வழங்கப்பட்டன. மத்திய அதிவேக வீதியில் கடற்ப டையினால் பயணச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்டன.

தெற்குஅதிவேகவீதியின்கஸாகல நுழைவாயிலிலும் கொட்டாவை நுழைவாயிலிலும்இராணுவத்தினரே பயணச்சீட்டு விநியோகித்தனர். இராணுவத் தளபதியும் கொட்டாவ நுழைவாயிலுக்கு சென்று நிலைமையை அவதானித்தமை குறிப்பிடத்தக்கது.

## இனி இது .....

முதல் நாளே வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் அஞ்சலி செலுத்தினார். கிட்டத்தட்ட அதனைத்திறந்து வைத்தார் என்று சொல்லலாம். வடக்கு மாகாண முதலமைச்சராகப் பதவியேற்ற தொடக்க காலத்தில் அவர் ஆயுதக் கலாசாரம் தொடர்பில் தெரிவித்த கருத்துக்கள் இப்போது ஞாபகத்திற்கு வருகின்றன.

க.வி.விக்னேஸ்வரனை முதல மைச்சராக்குவதற்கான கோரிக்கை அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்திருந்த 4 தமிழ்க் கட்சிகளாலுமே விடுக்கப்பட்டிருந்தது. அப்படி 4 கட்சிகளும் ஒன்றிணைந்-து கேட்டால்தான் முதலமைச்சர் வேட்பாளராகத் தான் களமிறங் குவார் என்று அவர் நிபந்தனை விதித்திருந்தார். அப்படி, தமிழ் அரசுக் கட்சி, ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எவ் ஆகிய கட்சிகளால் அரசியலுக்குகைப்பிடித்துஅழைத்து வரப்பட்டபோதும் விக்னேஸ்வரன் தன்னைத் தொடக்கத்தில் தமிழ் அரசுக் கட்சி சார்பானவராகவே அடையாளப்படுத்தி வந்தார். இது ஏனைய கட்சிகளுக்குப் பிடிக்கவில்லை. அவை அது குறித்து அவரிடம் குறைப்பட்டுக் கொண்டபோது, நான் எப்படி என்னை ஆயுதக் கலாசாரம் கொண்ட கட்சிகளோடு அடையாளப் படுத்திக்கொள்ள முடியும், அதனால் இயல்பாகவே தமிழ் அரசுக் கட்சியுடன்தான் எனது அரசியல் சாய்வு இருக்கும் என்கிற வகையில் அவர் கருத்துத் தெரிவித்திருந்தார்.

அதன் பின்னர் தமிழ் அரசுக் கட்சிக்குள் இருந்து அவரது முதலமைச்சர் பதவிக்கு ஆபத்து வந்தபோது கூட்டடமைப்பில் இருந்த ஏனைய ஆயுதக் கலாசாரம் கொண்ட கட்சிகள்தான் அவரைத் தாங்கிப்பிடித்தன என்பது வரலாறு. அவற்றின் துணையுடன் தன்னை ஒரு தலைவராக நிலைநிறுத்திய விக்கினேஸ்வரன்அதன்விளைவாக நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டு வெற்றிபெற்றார். அப்படிப் போட்டியிட்டபோதும் ஈபிஆர்எல்எவ் போன்ற ஆ-யதக் கலாசாரம் கொண்ட கட்சிகளுடன் கூட்டுச் சேர்வதற்கு அவர் தங்கியதில்லை.

இப்போது அவருடன் சேர்ந்திருக் கக்கூடிய யாழ். மாநகர சபை முன்னாள் முதலர்வர் வி.மணி வண்ணன் தலைமையிலான குழுவினரே விடுதலைப் புலிகளின் மாவீரர்கள் நினைவாலயத்தை அமைத்ததன் பின்னணியில் இருப்பவர்கள். தமது அரசியலின் அடிநாதமாகப் புலிகளை முதன்மைப்படுத்துபவர்கள் அந்தத் தரப்பினர். புலிகளின் தன்னலமற்ற தியாகத்தைக் கட்சிகள் தமது அரசியலுக்குப் பயன்படுத்திக்கொள்ளலாமா என்கிற கேள்வி ஒருபுறமிருக்க, தமிழ்ச் சமூகத்தின் ஆயுதக் கலாசாரத்தின் உச்சத்தை, உன்னதத்தை வெளிப்படுத்தியவர்கள் விடுதலைப் புலிகள் என்பதே உண்மை.

அரசியலில்தம்மைத்தக்கவைக்க விக்னேஸ்வரன் இப்போது அந்தக் ஆயுதக் கலாசாரத்துடன் தன்னை அடையாளப்படுத்திக்கொள்வதற்கு எந்தத் தயக்கமும் கொண்டி ருக்கவில்லை என்பது நல்ல மாற்றம்தானே. ஒரு காலத்தில் ஆயுதக் கலாசாரத்திலிருந்து ஜனநாயக வழிக்குத் திரும்பிய கட்சியினருடனேயே தன்னை அடையாளப்படுத்த முடியாது என்று கூறிய தலைவர். தொடக்கம் முதல் இறுதிவரை ஆயுதங்களைக் கைவிடாத அமைப்பினரோடு தன்னை அடையாளப்படுத்த முற்பட்டிருப்பது நல்ல மாற்றம் தானே.

அதேபோன்று நேற்று நாடாளுமன்றத்தில் குழு நிலை விவாத்தில் பேசிய தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் மக்களுக்காகப் போரிட்டு மடிந்தவர்களை நினைவு கூருகின்றார் என்று தெரிவித்தார். விடுதலைப் புலிகள் அமைப்பின் வடக்கில் இருந்து முஸ்லிம்களை வெளியேற்றியமையை இனச்சுத்திகரிப்புக்கு ஒப்பிட முடியும் என்பது உட்படப் புலிகள் குறித்த பல்வேறு சர்ச்சைகளிற்குள் சிக்கிக்கொண்டவர் சுமந்திரன். அதன் விளைவாக இப்போதும் பலரது எதிர்ப்பையும் வெறுப்பையும் எதிர்கொண்டு வருபவர். அவரும் இன்று நாடாளுமன்றத்திலேயே புலிகளை நினைவுகூர்ந்திருப்பது நல்ல மாற்றம்தானே!

சிங்கள அரசியலால் தொடர்ந்து ஏமாற்றப்படும்போது தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தின் நியாயப் பாடுகள் இன்னும் இன்னும் புரிதலுக்குஉற்புதலுக்கும்உள்ளாகும் நிலைமை ஏற்படும். ஒருநாள் அது ஸ்வஸ்திகாவுக்கும் புரியவரும் என்று எதிர்பார்ப்போமாக!

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு,செலவுத்திட்டத்தின் மீதான இரண்டாவது வாக்கெடுப்பு நேற்று நடைபெற்றது. இந்த வாக்கெடுப்பில் எமது கட்சியும், சுமந்திரனும், சாணக்கியனும் மட்டுமே எதிர்த்து வாக்களித்திருந்தோம்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் வரவு,செலவுத் திட்டத்தினை மிகக் கடுமையாக எதிர்த்தார்கள். அதற்கு அவர்களின் உரைகள் சான்றுகளாக உள்ளன. குறிப்பாக, ஏனைய ஜனநயாக தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர்களும் கடுமையாக எதிர்த்தார்கள். சி.வி.விக்னேஸ்வரன் மிகக் கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டார்.

ஆனால், அவர்கள் யாரும் வாக்கெடுப்பில்பங்கெடுக்கவில்லை. நாடாளுமன்றத்திற்கு சமுகமளித் தவர்கள் கூட வாக்கெடுப்பு நேரத்தில் அங்கிருந்துவெளியேறியிருந்தார்கள். ஆகவே, இந்தச் செயற்பாடானது அவர்களின்இரட்டைவேடத்தினைக் காண்பிக்கிறது. அவர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வெள்ளையடிக்கும் செயற்பாட்டை முன்னெடுக்கின்றார்கள் என்றார்.

## 4 வயதில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் மொத்தமாக சுமார், 243,000 ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். 40,000 ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர் என்றால், கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. நாட்டினுள் 40,000 ஆசிரியர்களுக்கான பற்றாக் குறை காணப்படுவது என்பது மிகையானது.

ஆசிரியர்களைநியமிப்பதில்தான் சிக்கல் காணப்படுகிறது. சில பாடசா லைகளை ஒன்றாக சேர்த்தால் மாணவர்களைவ விட ஆசிரியர்க ளின் எண்ணிக்கையே அதிகமாகக் கானப்படுகிறது.

அத்துடன், 2023-2033 ஆம் ஆண்டுக்கான கல்வி சீர்தி ருத்தக் கொள்கை எதிர்காலத்தில் நாடாளுமன்றதுறைசார்கண்காணிப் புக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும். அதன் பிரதிகள் அனைத்து நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கும் வழங்கப்படும்.

தற்போது, விஞ்ஞானத்துறைக்கு சுமார் 5,000 ஆசிரியர்கள் உள்ள னர். நீண்டகாலமாக பாடசாலை களை வகைப்படுத்தி, கட்டமைத் தல் நீண்டகாலமாக மேற்கொள்ளப் படவில்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மேல் மாகாணத்தில் ஆசிரியர் களைஇணைத்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் இந்த நாட்களில்இடம்பெற்றுவருகின்றன. தேசிய பாடசாலைகளுக்கு 1,700 ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதற்கான வர்த்தமாணி அறிவித்தல் கடந்த வாரம் வெளியிடப்பட்டது. சேவையை விட்டு வெளியானவர்களை கணக்கெடுத்து அதற்கு பதிலாக ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றார்

## மனிதச் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒத்ததாக அகிம்சை ரீதியாக போராட முடியும். ஆனால்அதனைதலைமை தாங்குவதற்குதலைமையேற்பதற்கு யாரும் இல்லை, மக்களை சரியாக வழிபடுத்தவும் ஒழுங்கான தலைமை இல்லை, உதாரணமாக நான்ஒன்றைகூறவிரும்புகின்றேன் அண்மையில் ஒரு கட்சியை சேர்ந்தவர்கள் மனித சங்கிலி போராட்டம் என மருதனார்மடம் சந்தியிலிருந்துயாழ்ப்பாணம்வரை மனித சங்கிலி போராட்டத்திற்கு அழைப்பு விட்டார்கள். ஆனால் அதில் கட்சி ஆதரவாளர்கள் கூட பங்குபற்ற வில்லை, வீதியால் சென்றவர்கள் அந்த மனித சங்கிலி போராட்டத்தில் பங்கு பற்றியிருந்தாலேயேயாழ்ப்பாணம் வரைக்கும் அந்த மனித சங்கிலி போராட்டம் நீண்டிருக்கும். ஆனால் விதியால் சென்றவர்களும் பார்வையாளர்களாகவேசென்றதன் காரணமாக அந்த போராட்டம் கொச்சைப்படுத்தப்பட்டு மனித சங்கிலி போராட்டம் தோல்வி அடைந்துள்ளது.

எமது அஹிம்சை ரீதியான போராட்டமும் சரி ஏனைய போராட்டங்கள் என்றாலும் அதனை செயற்படுத்துவதற்கு ஒழுங்கான தலைமைத்துவம் இல்லை இந்த மனித சங்கிலி போராட்டத்திற்கு அழைப்பு விட்டவர்கள் அதனை ஒழுங்கான முறையில் செயற்படுத்தவில்லை என்றே கூறலாம்.

நான் ஏற்கனவே குறிப்பிட்ட விடயம் ஒன்றினை குறிப்பிட விரும்புகின்றேன், காலையில் உண்ணாவிரத போராட்டத்தில் இருந்த ஒருவர் 11 மணியளவில் கல்வியக்காடு சந்தையில் மீன் வாங்க நிற்கின்றார் போராட்ட முடிவு நேரத்தில் அவரை உண்ணாவிரத பந்தலில் கண்டேன் இப்படியான தலைவர்கள் இருக்கும் நிலையில் எமது போராட்டங்கள் எவ்வாறு வெற்றியடையும்?

எமது மாவீரர்களின் வரலாறுகளை எதிர்கால சந்ததியினருக்கு இந்த மரநடுகை மாதத்தின் மூலமாவது கடத்த வேண்டும்.

நாங்கள் ஒவ்வொருவரும் ஆளுக்கொரு மரம் நடுவோம் கட்டாயமாக அது ஒரு நல்ல பயனைத் தரும் எனினும் எமது எதிர்கால சந்ததியினர் தற்பொழுது வெவ்வேறு துறைகளில் மோகம் கொண்டுள்ளார்கள். குறிப்பாக தென்னிந்திய சினிமா மற்றும் தென்னிந்தியகலைஞர்களைஇங்கே கொண்டு வந்து கொண்டாடுதல் போன்ற பல்வேறு துறைகளில் மோகம் கொண்டுள்ளார்கள். அவ்வாறான எதிர்கால சந்ததியினருக்கு எமது கடந்த கால வரலாறுகளை கடத்துவதற்கு இந்த மரநடுகை மாதமானது ஒரு உதாரணமாக காணப்படுகிறது.

மர நடுகை மாதமானது கார்த்திகை மாதம் தான் செயற்படுத்தப்படுகின்றதுஅதேபோல எமது இனத்துக்காக போராடிமடிந்த மாவீரர்களின் நினைவேந்தல் நிகழ்வுகளும் கார்த்திகை மாதத்தில் தான் இடம்பெறுகின்றது,

எனவே இந்த மரநடுகை மாதத்தைநடைமுறைப்படுத்துவதன் மூலம் எதிர்கால சந்ததியினருக்கு எமது கடந்த கால வரலாறுகளை கடத்துவதற்கு இலகுவாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

## குளியலறையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கமரா உதவியுடன் கைது செய்த யாழ்பிராந்திய பொலிஸ் புலனாய்வு பிரிவினர் குறித்த நபரை யாழ்ப்பான பொலிஸ் நிலையத்தில் சிறுவர் பெண்கள் பிரிவில் பாரபடுத்தினர்.

இதன்படி யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் சந்தேக நபர் முற்படுத்தப்பட்டு 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

## ஜனாதிபதிக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கான ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதத்தில் இறுதியில் ஜனாதிபதி,பிரதமர் உள்ளிட்ட அரச நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளநிதிசெலவுத்தொகை தொடர்பான பிரேரணைக்கு சபாநாயகர்சபையின்அனுமதியைக் கோரினார்.

இதன்போது பொருளாதார படுகொலையாளிகள் என்று உயர்நீதிமன்றத்தால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபாய ராஜபக்ஷ ஆகியோருக்கு நிதி ஒதுக்குவது முறையற்றது எனத்தெரிவித்து மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க ஜனாதிபதிக்கான நிதி செலவினங்களுக்கான ஒதுக்கீட்டுக்கு வாக்கெடுப்பை கோரினார்.

இதனையடுத்து இடம்பெற்ற வாக்கெடுப்பில் ஜனாதிபதிக்கான நிதிசெலவினங்களுக்கான ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக 62 வாக்குகளும் எதிராக 3 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் 59 மேலதிக வாக்குகளினால் ஜனாதிபதிக்கான நிதிசெலவினங்களுக்கான ஒதுக்கீடு நிறைவேற்றப்பட்டது.

மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்களான அனுர குமார திஸாநாயக்க, ஹரிணி அமரசூரிய மற்றும் விஜித ஹேரத் ஆகியோர் மாத்திரம் வாக்கெடுப்பில் எதிராக வாக்களித்தினர்.பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உட்பட பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் எதிரணியின் உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்துக் கொள்ளவில்லை.

## பிரபாகரன் யார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைதான் இங்கு காணப்ப டுகின்றது என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தினால்மரநடுகைமாதத்தை முன்னிட்டுநடாத்தப்படும்'கார்த்திகை வாசம்' மலர்கண்காட்சி ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாலது:

இன்னும் பத்து வருடங்களில் தமிழ் தேசிய தலைவர் பிரபாகரன் யார் என இருக்கக்கூடிய நிலைமை தான் இங்கு காணப்படுகின்றது.

எங்கள் மக்களிடத்தில் மறதி என்கின்றபண்புவளர்ந்துவருகின்றது இதன் காரணமாக மக்கள் பழைய விடயங்களைமறக்கின்றநிலைமை காணப்படுகின்றது.

குறிப்பாகஐங்கரநேசன்என்பவர் ஒரு தமிழ்த் தேசிய உணர்வோடு நீண்ட காலமாக பயணித்து வருபவரினால் இந்த மர நடுகை மாதம் ஆண்டுதோறும் சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றது

குறிப்பாக மாகாண சபை செயற்பாட்டில் இருந்தபோது திரு ஐங்கரன் அவர்கள் விவசாய அமைச்சராக இருந்தபோது இந்த கார்த்திகை மாதத்தினை மர நடுகை மாதமாக பிரகடனப்படுத்தி தீர்மானத்தை நிறைவேற்றினோம்.

எனவே மாகாண சபையின் அவைத்தலைவர் என்ற ரீதியில் அந்த தீர்மான நிறைவேற்றியதில் எனக்கும் ஒரு பங்கு உண்டு.

ஆகவே எனக்கு அதில் ஒரு சந்தோஷம் உள்ளது அதாவது இந்த மரநடுகை மாதத்தை தீர்மானமாக நிறைவேற்றியதில்நானும்பங்காற்றி இருக்கின்றேன் என

ஐங்கரநேசன் மாத்திரம் தற்பொழுது இந்த மரநடுகையை செயற் திட்டத்தினை முன்னெடுத்து வருகின்றார்

ஆனால் மாகாண சபை செயற்பாட்டில் இருந்த காலத்தில் இந்த செயற்திட்டமானது வடக்கு மாகாணத்தில்எல்லாமாவட்டத்திலும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது ஆனால் தற்பொழுது அந்த நிலை மாறிவிட்டது மரநடுகை தற்பொழுது தமிழ்தேசியபசுமைஇயக்கத்தினால் மாத்திரமேமுன்னெடுக்கப்படுகின்றது அது ஐங்கரநேசனால் மாத்திரம் முன்னெடுக்கப்படுகின்றது

ஐங்கரநேசன்இந்த மண்ணி னுடைய மரநடுகை மைந்தனாக அந்த பெருமையோடு மேலும் இந்த கைங்கரியத்தினை முன் னெடுப்பதற்கு இந்த சமூகம் அவரோடு இணைந்து பயணிக்க வேண்டும் ஆதரிக்க வேண்டும் ஒத்துழைக்க வேண்டும் இந்த விடயத்தினை தொடர்ச்சியாக அவர் முன்னெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்,

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர்
Kalaikkathir

# கிரிக்கெட்டுக்காக ஒன்றுபட்டதைப் போன்று இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண ஒன்றுபடுக

## அங்கஜன் இராமநாதன் அழைப்பு



நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினை தற்போதைய நிலைக்கு மூல காரணம் என்பதை எவரும் மறுக்க முடியாது.

13 ஆவது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதியுடன் பல கட்ட பேச்சுகளில் ஈடுபட்டோம். பேச்சின் அடுத்தக்கட்டம் என்ன ? கிரிக்கெட்டுக்கு ஒன்றுபட்டதை போன்று இனப் பிரச்சினைக்கு தீர்வு காண ஆளும், எதிர் தரப்பு ஒன்றுபட வேண்டும் என நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தலைவர் அங்கஜன் இராமநாதன் சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

பொருளாதார மீட்சிக்கான திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ள பின்னணியில் 2024 ஆம் ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டம் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

வரி அடையாள அட்டையை அமுல்படுத்துவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. ஆனால் அது வெற்றிகரமாக செயற்படுத்தப்பட வேண்டும்.

வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள பாலியாறு திட்டம் கவனத்தை ஈர்த்துள்ளது. யாழ்.மாவட்டத்தில் நிலவும் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுக்குமாறு கடந்த ஆறு தசாப்தகாலமாக வலியுறுத்தி வருகிறோம். பாலியாறு திட்டத்தால் சுமார் 6 லட்சத்து 50 ஆயிரம் பேர் பயனடைவார்கள்.

அத்துடன் 41.2 எம்.சி.குடி நீருக்காகவும், 4.7 எம்.சி. விவசாய நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்த முடியும்.

இந்த திட்டத்துக்காக ஆரம்பக்கட்டமாக 250 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த காலங்களில் யாழுக்கு நதி திட்டத்துக்கு 2000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. ஆனால் அந்த திட்டம் செயற்படுத்தப்படவில்லை.

ஆகவே தற்போது ஒதுக்கப்பட்டுள்ள 250 மில்லியன் ரூபா நடைமுறைக்கு சாத்தியமாகுமா? திட்டம் வெற்றிபெறுமா? என்ற சந்தேகம் காணப்படுகிறது.

பாலியாறு போன்ற மாபெரும் திட்டத்துக்கு 250 மில்லியன் ரூபா போதுமானதல்ல. ஆகவே இந்த முன்மொழிவும் வெறும் கண்துடைப்பு என்று எம் மக்கள் குறிப்பிடுகிறார்கள்.

அதேபோல் கடல் நீரை சுத்திகரிக்கும் திட்டம் தாளையடியில் ஆரம்பிக்கப்பட்டது. அந்தத் திட்டத்துக்கு என்னவாயிற்று. இந்த பாலியாறு திட்டத்தால் தாளையடி திட்டம் கைவிடப்படுமா என்ற சந்தேகம் காணப்படுகிறது.

சுமார் 60 வருடகாலமாக தவித்த வாய்க்கு தண்ணீர் கொடுக்காமல் இருக்கின்றீர்களே, இதற்கு நீங்கள் அனைவரும் வெட்கப்பட வேண்டும்.

மறுபுறம் பூ நகரியில் சுற்றுலா அபிவிருத்திக்காக 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது மகிழ்ச்சிக்குரியது. ஆனால் பூநகரியில் கௌதாரிமுனையை வெளிநாட்டு நிறுவனத்துக்கு முழுமையாகத் தாரை வார்க்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இந்த அபிவிருத்தித் திட்டங்களால் மக்களுக்கு என்ன பயன், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு அபிவிருத்திகளை கொண்டு செல்கிறோம் என்று சர்வதேசத்துக்கு திரைப்படம் காண்பிக்கப்படுகிறது.

பாதீடு என்பது தேர்தலுக்கான விஞ்ஞாபனம் என்று மக்கள் குறிப்பிடுகிறார்கள். சம்பள அதிகரிப்பை அறிவித்து விட்டு மறைமுகமாக பொருள்களின் விலையேற்றத்தை வரவு - செலவுத் திட்டம் கொண்டுள்ளது.

வரவுக்கு மேலதிகமாக செலவுகள் காணப்படுகின்றன. இன முரண்பாடுகள் தற்போதைய நிலைக்கு காரணம் என்பதை எவராலும் மறுக்க முடியாது. பிரச்சினையின் ஆணிவேராகக் காணப்படும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ன ?

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி எம்முடன் பல கட்டப் பேச்சுகளை முன்னெடுத்தார். காணி விடுவிடுப்பு, மீள்குடியேற்றம் உள்ளிட்ட 15 அம்சங்கள் தொடர்பில் அடுத்தக்கட்ட தீர்வு என்ன கடந்த 15 ஆண்டுகாலமாக நிலங்கள் இணைக்கப்பட்டுள்ளனவே, தவிர மனங்கள் இணைக்கப்படவில்லை. மக்களின் பங்களிப்பு இல்லாமல் ஒருபோதும் முன்னேற்றத்தை எதிர்பார்க்க முடியாது.

நாட்டின் கிரிக்கெட் துறை தொடர்பில் 225 உறுப்பினர்களும் விசேட கவனம் செலுத்தினார்கள்.

கிரிக்கெட்டைப் பாதுகாக்க ஆளும் மற்றும் எதிர்தரப்பினர் ஒன்றிணைந்தார்கள். கிரிக்கெட்டுக்கு ஒன்றிணைந்ததை போன்று இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவும் அனைவரும் ஒன்றுப்பட வேண்டும். அதற்கான காலம் தோற்றம் பெற்றுள்ளது. - என்றார். (05)

# வடக்கில் 3 தொழிற்பேட்டைகளை அமைக்கும் நடவடிக்கை மும்முரம்

வடமாகாணத்தில் மேற்கொள்ளக்கூடிய முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பான கலந்துரையாடல், மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேன தலைமையில், வட மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

சுற்றுலாதுறை உள்ளிட்ட வருமானம் ஈட்டக்கூடிய துறைகளில் காணப்படக்கூடிய சிக்கல்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், அதிகாரிகளின் ஆலோசனைகளும், ஒத்துழைப்பும் கிடைக்கும் பட்சத்தில் முதலீட்டு ஊக்குவிப்புகளை மேற்கொள்ள முடியும் என இதன்போது வட மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேன குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு -

சுற்றுலாதுறை உள்ளிட்ட வருமானம் ஈட்டக்கூடிய துறைகளில் காணப்படக்கூடிய சிக்கல்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், அதிகாரிகளின் ஆலோசனைகளும், ஒத்துழைப்பும் கிடைக்கும் பட்சத்தில் முதலீட்டு ஊக்குவிப்புகளை மேற்கொள்ள முடியும்.

இந்நிலையில் வடமாகாணத்தில் மூன்று தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மும்முரமாக மேற்கொள்ளப்படுகின்றன என இலங்கை முதலீட்டுச் சபையின் வலய முகாமைத்துவ பிரதம நிறைவேற்று பணிப்பாளர் தெரிவித்தார். காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளம் ஆகிய பகுதிகளில் தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கான அமைச்சரவை பத்திரம் தயார் செய்யப்பட்டுள்ளதாகவும், விரைவில் இதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

குறித்த கலந்துரையாடலின் போது இலங்கை முதலீட்டு சபையின் வலய முகாமைத்துவ நிறைவேற்று பணிப்பாளர் எம்.கே.டி.லோரன்ஸ், காணி, உள்ளூராட்சி திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகார சபை உள்ளிட்ட அரச திணைக்களங்களின் அதிகாரிகளும், சுற்றுலாத்துறை ஒன்றியத்தினரும், வர்த்தக பிரமுகர்கள் ஆகியோர் கலந்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது . (05)

# தேசிய அடையாள அட்டையை வைத்திருக்கும் ஒவ்வொரு இலங்கையருக்கும் வரிக் கோப்பு

தேசிய அடையாள அட்டையை வைத்திருக்கும் ஒவ்வொரு இலங்கையரும் எதிர்காலத்தில் வரிக் கோப்புகளைத் திறக்க வலியுறுத்தப்படலாம் என அரசாங்க உயர் மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த ஆண்டு தனது 2023 வரவு செலவுத் திட்டத்தில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரையும் முதல் கட்டமாக வரிக் கோப்பைத் திறக்குமாறு வலியுறுத்தினார்.

வரி செலுத்தும் 18 வயதுக்கு மேற்பட்ட 16 மில்லியன் பேரில், 2023 இல் இதுவரை 198,253 பேர் மட்டுமே பதிவு செய்துள்ளனர் என இலங்கையின் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் கண்டறிந்துள்ளது.

இந்த யோசனை முன்மொழிவு மட்டத்தில் மட்டுமே இருப்பதாகவும் புதிய அடையாள அட்டை வந்த பின்னர் எதிர்காலத்தில் இது சாத்தியமாகும் எனவும் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சமீபகாலமாக வரி வருவாயை அதிகரிக்கத் தவறிய நிலையில் அதனை அதிகரிக்க 2024 வரவு செலவுத் திட்டத்தில் வருவாய் அதிகார சபையை நிறுவ ஜனாதிபதி முன்மொழிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

# ஏ9 வீதியில் உள்ள 46 மரங்களை உடனடியாக அகற்ற நடவடிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏ9 வீதியில் உள்ள ஆபத்தான 46 மரங்கள் முழுமையாக அகற்றும் பணி செவ்வாய்க்கிழமை ஆம்பமானது.

குறித்த வீதியில் ஆபத்தானதாக 57 மரங்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் அதில் 46 மரங்களை முழுமையாக அகற்றவும், 11 மரங்களின் ஆபத்தான கிளைகளை அகற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தால் முன்னெடுக்கப்படும் குறித்த நடவடிக்கைக்கு போக்குவரத்து பொலிஸார், மின்சார சபையினர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதேச சபையினர் மற்றும் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினரும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# போராட்டத்தினூடாக மக்கள் கற்பித்த பாடத்தை ஆளும் தரப்பு இன்றும் கற்றுக்கொள்ளவில்லை

## கபீர் ஹாசிம் சாட்டை



போராட்டத்தின் ஊடாக நாட்டு மக்கள் கற்றுக்கொடுத்த பாடத்தை ஆளும் தரப்பு இன்றும் கற்றுக்கொள்ளவில்லை. பொருளாதாரப் படுகொலையாளிகளை உயர்நீதிமன்றம் அடையாளப்படுத்தியுள்ள நிலையில் அவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

சட்டவாட்சி கோட்பாடு முறையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

ஊழல்வாதிகளைத் தண்டிக்க வேண்டும், மோசடி செய்யப்பட்ட அரச நிதியை அரசுடைமையாக்க வேண்டும் என நாட்டு மக்கள் போராட்டத்தில் வலியுறுத்தினார்கள்.

போராட்டத்தில் இருந்து ஆளும் தரப்பின் இன்றும் பாடம் கற்றுக்கொள்ளவில்லை. எதிர்க்கட்சிகளை அச்சுறுத்தி ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள்.

பொருளாதாரப் பாதிப்புக்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் நாங்கள் பலமுறை வலியுறுத்தினோம்.

ஆனால் மோசடியாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் தற்றுணிவு ஜனாதிபதிக்கு இல்லை. ஆனால் உயர்நீதிமன்றம் தற்றுணியுடன் பொருளாதாரப் படுகொலையாளிகளை பகிரங்கப்படுத்தியுள்ளது. உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை ஆளும் தரப்பினர் ஏற்க மறுக்கிறார்கள்.

பொருளாதாரப் படுகொலையாளிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள தரப்பினருக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை என்ன? சட்டவாட்சி கோட்பாடு சகல தரப்பினருக்கும் சமமாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

2021.12.10 ஆம் திகதி 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றிய போது அப்போதைய நிதியமைச்சர் பஷில் ராஜபக்சவிடம் நாட்டின் வெளிநாட்டு கையிறுப்பு 1.4 பில்லியனாக குறைவடைந்துள்ளது.

அடுத்த ஆண்டு 7.2 பில்லியன் டொலர் கடன் செலுத்த வேண்டும். வெளிநாட்டு கையிறுப்பை அதிகரித்துக் கொள்வதற்கும், கடன் செலுத்துவதற்கும் அரசாங்கத்திடம் உள்ள திட்டங்கள் என்ன என்று கேள்வியெழுப்பினேன்.

இதற்கு பதிலளித்த அப்போதைய நிதியமைச்சர் பஷில் ராஜபக்ச ' வெளிநாட்டு கையிறுப்பு மற்றும் வெளிநாட்டு கடன் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் என்பதை பொறுப்புடன் குறிப்பிட்டுக் கொள்கிறேன் ' என்று குறிப்பிட்டார். ஆனால் நாடு வங்குரோத்து நிலையடையும் வரை எவ்விதமான பொருளாதாரத் திட்டங்களும் சபைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தில் தேசிய வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு எவ்வித திட்டங்களும் சமர்ப்பிக்கப்படவில்லை.

மாறாக, வரி அதிகரிப்பதையும், தேசிய வளங்களை விற்பதையும் பிரதான கொள்கையாக கொண் டுள்ளது. அடுத்த ஆண்டு முதல் வற் வரியை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளிய தரப்பினருக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாத நிலையில் நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் வரி விதிப்பை அதிகரிப்பது முற்றிலும் முரணானது. சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தால் ஏற்படும் போகும் முரண்பாடுகளுக்கு அரசாங்கம் எவ்வாறு தீர்வுகளை முன்வைக்கும். - என்றார். (05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சிறுவர் உரிமைகள்

34 ஆண்டுகளுக்கு முன்பு, கார்த்திகை 20, 1989 அன்று உலகத்தலைவர்கள் உலகக்குழந்தைகளுக்கான ஒற்றுமையின் ஓர் அரிய தருணத்தில் ஒன்று கூடினர். குழந்தைகளின் உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் மாநாடு (CRC) ஒவ்வொரு குழந்தைக்கும் தனது உரிமைகளைப் பாதுகாக்கவும் நிறைவேற்றவும் உள்ள உரிமை ஒரு வாக்குறுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

குழந்தைப் பருவம் அல்லது 18 வயதுக்குக் கீழ் இருப்பது, உடல் வளர்ச்சி, விளையாட்டு, கற்றல் மற்றும் மன வளர்ச்சிக்கான வாழ்க்கையில் ஒரு சிறப்பு தருணம் என்பதை அந்த மாநாடு அங்கீகரித்தது.

1990இல் இந்தப் பன்னாட்டு உடன்படிக்கையில் கையெழுத்திட்ட முதல் நாடுகளில் இலங்கையும் இருந்தது. 1991இல் அதை அங்கீகரித்தது – அதை செயல்படுத்துவதற்கும் பொறுப்புக் கூறுவதற்கும் உறுதியளித்திருந்தது.

அப்போதிருந்து, குழந்தை உரிமைகள் தொடர்பாக இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. என்றாலும் முழுமையான முன்னேற்றத்தை அடைந்துள்ளோமா?

அண்மையில் வெளியான அறிக்கையின்படி இலங்கையில் 5 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு பத்தில் நான்குக்கும் மேற்பட்ட குழந்தைகள் (42.2 சதவீதம்) சுகாதாரம், கல்வி, போதுமான வாழ்க்கைத் தரம் தொடர்பான இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடிப்படை உரிமைகள் இல்லாத குடும்பத்தில் வாழ்கின்றனர்.

2021– –2022 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட தேசிய மதிப்பீட்டின்படி, தரம் 3 மாணவர்களில் 14% பேர் மட்டுமே எழுத்தறிவில் அனைத்து அத்தியாவசிய கற்றல் திறன்களையும் அடைந்துள்ளனர். எண்ணிக்கையில், இது 15% ஆக இருந்தது. இந்தத் திறன்கள் குழந்தைகள் தங்கள் அறிவையும் எதிர்காலத்திற்கான பல்வேறு திறன்களையும் உருவாக்க அடித்தளமாக அமைகின்றன.

இலங்கை முழுவதும், 10,000க்கும் மேற்பட்ட குழந்தைகள், அரச சிறுவர் இல்லங்களில் அல்லது சிறைகளில் தடுப்புக் காவலில் வாழ்கின்றனர். இந்த குழந்தைகளில் 90% க்கும் அதிகமானோர் ஒரு குடும்பம் மற்றும் சரியான ஆதரவுடன் வீடு திரும்ப முடியும்.

குழந்தைகளுக்கெதிரான வன்முறைகள் வீட்டிலும், பள்ளியிலும், சமூகத்திலும் குழந்தைகளைப் பின்தொடர்ந்து வருகின்றன. பொருளாதார நெருக்கடிகளைக் கருத்தில் கொண்டு, துஷ்பிரயோக வழக்குகள் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக எச்சரிக்கப்பட்டு;ளது.

குழந்தை உரிமைகளில் வெளிப்படையாகக் காணப்படும் இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்கான ஒரு முக்கிய கருவி அதற்காக ஒதுக்கும் வளங்கள் ஆகும். எவ்வாறாயினும், கல்வி மற்றும் சுகாதார வரவு செலவுத் திட்டங்கள் சர்வதேச அளவுகோல்களைவிட இலங்கையில் மிகக் குறைவாகவே உள்ளது. அது முன்னேற்றத்தைத் தக்கவைத்து துரிதப்படுத்த போதுமானதாக இல்லை.

மதிப்பீடுகளின்படி, 2023 இல், மொத்த அரசு செலவினத்தில் 7.2 சதவீதத்தை இலங்கை முதலீடு செய்கிறது (சர்வதேச அளவுகோல் 15 முதல் 20 சதவீதம்), இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.3 சதவீதத்திற்கு சமமானதாகும் (சர்வதேச அளவுகோல் 4 முதல் 6 சதவீதம்).

2023 ஆம் ஆண்டில் இலங்கை அரசு தனது மொத்த அரசாங்க செலவினத்தில் 7.3 சதவீதத்தை அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.4 சதவீதத்தை சுகாதாரத்திற்காக ஒதுக்குகிறது. இதன் சர்வதேச அளவுகோல் 5 சதவீதமாகும்.

நாட்டின் எதிர்காலத் தலைவர்கள் இந்தக் குழந்தைகள்தான். எனவே அவர்கள் விடயத்தில் அதிக அக்கறை செலுத்தவேண்டியது ஒவ்வொருவரினதும் கடமை. அரசு இது விடயத்தில் மேலும் அதிக அக்கறை செலுத்தவேண்டும்.

# இந்தியா தோற்றது ஏன்?




**கார்த்திக்**



உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டித் தொடரில் இறுதிப் போட்டிவரை முன்னேறிய இந்திய அணி கோப்பையைக் கைப்பற்றத் தவறியிருக்கிறது. தொடர் முழுவதும் தோல்வியையே சந்திக்காத இந்திய அணி, இறுதிப் போட்டியில் மட்டும் தோல்வி அடைந்தது துரதிர்ஷ்டம் அல்ல. 'நாக் அவுட்' என்றழைக்கப்படும் வாழ்வா, சாவா போட்டியில் திட்டமிடலில் கோட்டைவிட்டால், எந்த அணிக்குமே தோல்விதான் கிடைக்கும். அதோடு இந்த உலகக் கோப்பையில் இந்திய அணிக்கு இருந்த புற அழுத்தங்களும் இறுதிப் போட்டியில் தோல்வியைத் தழுவுவதற்குக் காரணம் என்பதை மறுப்பதற்கில்லை.

### உதாரண உலகக் கோப் பைகள்

ஐம்பது ஓவர் உலகக் கோப்பையை இந்திய அணி இதுவரை இரண்டு முறை வென்றுள்ளது. 1983இல் இங்கிலாந்தில் நடந்த உலகக் கோப்பையை அப்போது வலுவற்றதாகக் கருதப்பட்ட இந்திய அணி யாரும் எதிர்பாராத விதமாக வென்றெடுத்தது. அது கபில் தேவ் என்கிற தலைமைக்குக் கிடைத்த மகத்தான வெற்றி. தொடக்கத்திலிருந்தே அணியின் தன்னம்பிக்கையை அவர் கட்டமைத்த விதமும் வழிகாட்டியதும் வலுவான மேற்கிந்தியத் தீவுகளைச் சாய்க்கத் துணைநின்றன. 2011இல் இந்திய அணி மிக வலுவானதாக இருந்தாலும் அப்போதைய அணித் தலைவர் எம்.எஸ்.தோனியின் கச்சிதமான திட்டமிடல்தான், இந்தியா கோப்பையை வென்றதற்கு முக்கியக் காரணம்.

இறுதிப் போட்டியில் யுவராஜ் சிங்குக்கு முன்பாக தோனி களமிறங்கியது ஒரு சிறந்த மாற்று உத்தி. 2023 உலகக் கோப்பையின் இறுதிப் போட்டி நடைபெற்ற அகமதாபாத் மைதானத்தில்தான் 2011 உலகக் கோப்பையின் காலிறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியாவை இந்தியா எதிர்கொண்டது. சுழற்பந்துவீச்சாளரான ரவிச்சந்திரன் அஸ்வின் அந்தப் போட்டியில் முதல் ஓவரை வீசி முக்கியமான இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினார். இந்த இரண்டு உலகக் கோப்பைகளில் இருந்த இதுபோன்ற மாறுபட்ட உத்திகளை, ஆச்சரியத் தருணங்களை 2023 உலகக் கோப்பையில் காண முடியவில்லை.

### திட்டமிடல் குறைபாடுகள்

2023 உலகக் கோப்பைத் தொடரில் ஹர்திக் பாண்ட்யா வெளியேறிய பிறகு, முகமது மியையும் சூர்யகுமார் யாதவையும் விளையாட வைத்தது; ஷர்துல் தாக்குரை வெளியே உட் கார வைத்தது மட்டுமே அணியில் நிகழ்ந்த மாற்றங்கள். ஐந்தாவது போட்டியிலிருந்து இறுதிப் போட்டிவரை அணி மாறவே இல்லை. சென்னையில் நடைபெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் லீக் போட்டியில் மட்டும் அஸ்வின் அணியில் சேர்க்கப்பட்டார் - அந்த உத்தி ஏன் இறுதிப் போட்டியில் கையாளப்படவில்லை? தொடர்ச்சியாக வென்றுவரும் ஓர் அணி அப்படியே தொடர வேண்டும் என்று அணி நிர்வாகம் நினைத்திருக்கலாம்.

ஆனால், எதிரணி யார் என்பதைப் பொறுத்தும், ஆடுகளத்தைப் பொறுத்தும் அந்த முடிவை மறுபரிசீலனைக்கு உட்படுத்தியிருக்க வேண்டும். ஏழு முறை உலகக் கோப்பை இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்ற, ஐந்து முறை கோப்பையை வென்றுள்ள ஆஸ்திரேலியா போன்ற ஓர் உறுதியான அணிக்கு எதிராக வழக்கமான உத்திகள் கைகொடுக்காது. முதலில் பேட்டிங் செய்தால் என்ன செய்ய வேண்டும், இரண்டாவதாக பேட்டிங் செய்தால் என்ன செய்ய வேண்டும், பேட்டிங் வரிசையில் மாற்றம் தேவையா, ஐந்து பந்துவீச்சாளர்கள் போதுமா, பகுதி நேரப் பந்துவீச்சாளர்கள் தேவைப்படுவார்களா... இப்படியெல்லாம் அணி நிர்வாகம் அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பி அவற்றுக்கு விடை கண்டிருக்க வேண்டும்.

இதற்கெல்லாம் முன்னோட்டமாக, சுற்றுப் போட்டிகளிலேயே சில மாற்றங்களைப் பரிசோதித்துப் பார்த்திருக்க வேண்டும். நெதர்லாந்துக்கு எதிரான சுற்றுப் போட்டியில் விராட் கோலி, ரோஹித் சர்மா, சூர்யகுமார் போன்றோர் பந்துவீசிப் பார்த்தது ஒரு நல்ல பரிசோதனை. ஆனால், இறுதிப் போட்டியில் வழக்கமான பந்துவீச்சாளர்கள், டிராவிஸ் ஹெட் - லபுனே விக்கெட்டை வீழ்த்த முடியாமல் தடுமாறிய போது புதிதாக ஒருவரைக்கூட பந்துவீச வைக்காதது ஏன்? கிரிக்கெட்டைப் பொறுத்தவரை அன்றைய நாளில் யார் சிறப்பாக செயல்படுகிறார்களோ, அவர்களே வெற்றி பெற முடியும். தொடர்ச்சியாக 10 போட்டிகளில் வென்ற சாதனை எல்லாம் இறுதிப் போட்டி அன்று எந்தத் தாக்கத்தையும் இந்திய அணியிடம் ஏற்படுத்தவில்லை. சுற்றுப் போட்டிகளில் இரண்டு தோல்விகளைச் சந்தித்திருந்த ஆஸ்திரேலியா இறுதிப் போட்டியில் இந்தியாவைவிட பேட்டிங், பந்துவீச்சு, ஃபீல்டிங் என அனைத்து வகைகளிலும் சிறப்பாகச் செயல்பட்டது. கோப்பையையும் கைப்பற்றியது.

புற அழுத்தங்கள்: இந்த முறை போல, இதற்கு முன்னர் நடந்த உலகக் கோப்பைத் தொடர்களில் இந்திய அணிக்கு இத்தனை அழுத்தங்கள் இருந்திருக்குமா என்பது சந்தேகம்தான். குறிப்பாக 2019 உலகக் கோப்பை அரையிறுதிப் போட்டியில் பெற்ற தோல்விக்கு இந்தியா, நியூசிலாந்தைப் பழிதீர்த்தது போல, 2003 உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியாவிடம் பெற்ற தோல்விக்குப் பழி தீர்க்க வேண்டும், பல நாடுகள் பங்கேற்கும் சர்வதேசக் கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) தொடரை 10 ஆண்டுகளாக வெல்லாத குறையைப் போக்க வேண்டும் என்பன போன்ற அழுத்தங்கள் இந்த முறை இந்திய அணிக்கு மிகையாகவே ஏற்படுத்தப்பட்டன. கோப்பை இந்திய அணிக்குதான் என்ற வகையில் நடைபெற்ற பிரச்சாரங்களும் பேச்சுக்களும் செயல்பாடுகளும் அந்த அழுத்தங்களை மேலும் அதிகரித்தன.

இந்த முறை, தொடக்க விழாவே நடத்தப்படவில்லை. ஆனால், இறுதிப் போட்டிக்கு விமானப் படை சாகசம் உள்பட பிரம்மாண்டமான நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இவை எல்லாமே இந்திய மக்கள் வெற்றிக் கொண்டாட்ட மனநிலைக்கு வந்துவிட்டதைதான், வீரர்களுக்கு மறைமுகமாக உணர்த்தியிருக்கும். (5ஆம் பக்கம் பார்க்க...)



# சுதுமலை சிந்மய பாரதி வித்தி. தேசிய மட்டத்தில் 2 ஆம் இடம்!

யாழ்ப்பாணம், சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய மாணவர்களின் நாட்டார் இசை (குழு ) தேசிய மட்ட (அகில இலங்கை) போட்டியில் இரண்டாம் இடம் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளது. பங்குபற்றிய மாணவர்களுக்கும் வழிப்படுத்திய ஆசிரியைக்கும் பாடசாலை சமூகம் பாராட்டுக்களைத்தெரிவித்துள்ளது. (05)

# பெண்ணின் உயிரை பறித்த மிதி பலகை

பஸ்ஸின் மிதி பலகையில் பயணித்த பெண்ணொருவர் கீழே தவறி விழுந்து உயிரிழந்த சம்பவம் சிலாபத்தில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து சிலா பம் நோக்கிச் செல்லும் அரச பஸ்ஸில் பயணித்த 56 வயதான பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் சீதுவை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தன்டுகம விமா னப்படை வீதித் தடைக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் உயிரிழந்த பெண்ணின் சடலம் நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதோடு, இச்சம்பவத்தின் போது காயமடைந்த மற்றொரு நபரும் மேலதிக சிகிச்சைக்காக ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்துதொடர்பானமேலதிகவிசாரணைகளை சீதுவை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (05)

# இந்தியா தோற்றது ஏன்?

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இயல்புக்கு மாறான இதுபோன்ற புற அழுத்தங்கள் விளையாட்டில் எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தவே வாய்ப்பு அதிகம்.

முடிவைத் தீர்மானித்த பிட்ச்: இந்தியா இறுதிப் போட்டியில் தோற்றதற்கு பிட்ச் தன்மையும் ஒரு காரணமாகச் சொல்லப்படுகிறது. இரவு 7 மணிக்குப் பிறகு பனிப்பொழிவின் காரணமாகப் பந்துவீச்சு எடுபடவில்லை என்று பயிற்சியாளர் ராகுல் திராவிட் சொல்கிறார். அதே நேரம் லீக் சுற்றில் அதிக போட்டிகளில் முதலில் பேட்டிங் செய்த அணியே வென்றது. அந்தப் போட்டிகளில் பிட்ச், முதலில் பேட்டிங் செய்த அணி அதிக ரன் குவிப்பதாகவும் இரண்டாவதாக பேட்டிங் செய்த அணி ரன்களைக் குவிக்கத் தடுமாறுவதாகவும் அமைந்திருந்ததாகவே புரிந்துகொள்ள முடிகிறது. நவம்பர் முதல் பிப்ரவரி வரை குளிர்காலம் என்பதால் பிட்சின் தன்மை போட்டியின் நடுவே இப்படி மாற்றமடைவது தவிர்க்க முடியாதது என்று கூறப்படுகிறது.

ஆனால், இது ஆட்டத்தின் முடிவைத் தீர்மானிக்க அனுமதிப்பது சரியல்ல. உலகக் கோப்பை நடத்துவதற்கான கால அட்டவணையை முடிவு செய்வதற்கு முன் இதையும் கணக்கில் எடுத்துக்கொண்டிருக்க வேண்டுமல்லவா. உணர்ச்சியும் உத்திகளும்: உலகில் எந்த நாட்டிலுமே இல்லாத அளவுக்குக் கிரிக்கெட் பற்று அதிகமாக உள்ள நாடு இந்தியா. அதுவும் உலகக் கோப்பைத் தொடர் என்றால், அதைப் போருக்கு நிகராகக் கற்பனை செய்துகொள்ளும் ரசிகர்கள் இங்கு அதிகம். அதனால்தான் மற்ற விளையாட்டுகளைவிட கிரிக்கெட் இங்கு ஊதிப் பெருக்கப்பட்ட பலூனாக இருக்கிறது. உலகக் கோப்பை போன்ற தொடர்களில் அதில் ஓட்டை விழுந்தால், இங்கு இதயங்கள் நொறுங்கிவிடுகின்றன.

இறுதிப் போட்டித் தோல்வியை இந்தியர்களால் ஜீரணிக்க முடியாமல் போனதற்கு அதுவே காரணம். இதையெல்லாம் மனதில் வைத்துத்தான், 'அகமதாபாத்தில் ரசிகர்களை அமைதியில் ஆழ்த்துவதே எங்கள் இலக்கு' என்று ஆஸ்திரேலிய கேப்டன் பேட் கம்மின்ஸ் சொல்லியிருந்தார். சொன்னதைச் செய்தும் காட்டிவிட்டார். உள்நாட்டில் செல்வாக்குப் பெற்ற விளையாட்டில் ரசிகர்களை அமைதியாக்குவதும் ஓர் உத்திதான். உணர்ச்சிகரமான அம்சங்கள் எதுவும் விளையாட்டில் வெற்றி தேடித் தராது. விளையாட்டு உத்திகள்தான் வெற்றியைத் தேடி தரும். 2023 உலகக் கோப்பை அதைத்தான் நிரூபித்திருக்கிறது.

நன்றி: இந்து தமிழ் திசை



குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-

பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

நாணய நிதியத்துடனான பேச்சு தோற்றிருந்தால்

# நாட்டை ஒரு வாரத்துக்குக் கூட எவராலும் ஆண்டிருக்க முடியாது

**பந்துல சவால்**



சர்வதேசநாணயநிதியத்துடனான பேச்சு துரதிஸ்டவசமாக தோல்வியடைந்து, கடன் மறுசீரமைப்பும் தோல்வியடைந்தால் எவராலும் இந்த நாட்டை ஒருவாரத்துக்குக் கூட ஆட்சி செய்ய முடியாது.

இதுதான் உண்மை. வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு பணிகள் வெற்றிபெற்றால் தான் இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி பணிகளை இனிமுன்னெடுக்கமுடியும் என போக்குவரத்து, ஊடகத்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான வேளையின் போது நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் -

100,000 கிலோமீற்றர் வீதிகளை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டத்தின் கீழ்13,160 வீதிகளின் (10848 கிலோ மீற்றர்) அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தகருத்திட்டத்தின்கீழ்இதுவரை 5201 வீதிகளின் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளநிலையில்7959வீதிகளின்பணிகளில்அபிவிருத்திபணிகள் தற்காலிகமாகஇடைநிறுத்தப்பட்டுள்ளன.

வீதி அபிவிருத்திநடவடிக்கைகளை மேற்கொண்ட ஒப்பந்தகாரர்களுக்கு இதுவரை 168.3 பில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது,5 பில்லியன் ரூபா செலுத்தப்படவுள்ளது.

வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு பேச்சில் உள்ளதால் வெளிநாட்டு முதலீட்டுடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி பணிகள் அனைத்தும் தற்காலிகமாகஇடைநிறுத்தப்பட்டுள்ளன.

இலங்கைக்கு இரண்டாம் கட்ட நீடிக்கப்பட்ட கடன் தொகையை வழங்குவது குறித்து சர்வதேசநாணய நிதியம் எதிர்வரும் மாதம் 2 ஆம் திகதி முக்கிய பேச்சில் இடம்பெறவுள்ளது.

பொருளாதாரமீட்சிக்காகத்தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டம் வெற்றிபெற்றால் தான் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 48 மாத கால கடன் ஒத்துழைப்பை வழங்குவதை இந்த வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக உறுதிப்படுத்த வேண்டும்.

சர்வதேசநாணயநிதியத்துடனான பேச்சு துரதிஸ்டவசமாகத் தோல்வியடைந்து, கடன் மறுசீரமைப்பும் தோல்வியடைந்தால் எவராலும் இந்த நாட்டை ஒருவாரத்துக்குக் கூட ஆட்சி செய்ய முடியாது. இதுதான் உண்மை. ஆகவே நாட்டு மக்களுக்கு அரசியல் தரப்பினர் உண்மையை குறிப்பிட வேண்டும். - என்றார். (05)

# ராஜபக்சக்களைக் கர்மவினை தொடரும் எதிர்காலத்திலும் பலசம்பவங்கள் நிகழும்

**சரத் பொன்சேகா சுட்;டிக்காட்டு**



எனது மருமகனின் வியாபாரத்தை நான் அறிந்திருக்க வேண்டும் என்று எனக்கு எதிராக வாதாடிய முன்னாள் பிரதிசொலிசிட்டர்ஜெனரலுக்கு மஹிந்த ராஜபக்சவின் ஆட்சியில் உயர்நீதிமன்ற நீதியரசராக பதவி உயர்வு வழங்கப்பட்டது.

அவர்தான் இன்று ராஜபக்சர்களை பொருளாதார படுகொலையாளிகள் என்று அடையாளப்படுத்தியுள்ளார். இதுவே கர்மவினை என்பார்கள்.

கர்மவினை தொடரும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பல முன்மொழிவுகளை ஜனாதிபதி முன்வைத்துள்ளார். இந்த முன்மொழிவுகள் வெற்றிபெற்றால் மக்களுக்கு நன்மை பயக்கும்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரையில் ஜனாதிபதி இவ்வாறான பல முன்மொழிவுகளை வழங்கினார் ஆனால் அந்த முன்மொழிவுகள் ஏதும் செயற்படுத்தபடவில்லை.

அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள தேர்தல்களை இலக்காகக் கொண்டு வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிடப்படுகிறது.

தேர்தல் ஒன்று இடம்பெறுமாக இருந்தால் இவ்வாறான வாக்குறுதிகளை முன்வைக்கலாம்.தேர்தலும் எப்போது இடம்பெறும் என்பது கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரப் பாதிப்பால் சமூக விரோத செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் தீவிரமடைந்துள்ளன.

பாலியல் வன்கொடுமைகளில் ஈடுபடுபவர்களுக்கு மரண தண்டனை வழங்கி தண்டனையை நிறைவேற்ற வேண்டும் என்பது எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும்.

பொருளாதாரப்படுகொலையாளிகளை நீதிமன்றம் பகிரங்கப்படுத்தியுள்ளது.இந்தக் குற்றத்தை தேசத் துரோக செயற்பாடாகக் கருத வேண்டும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் நான் இரண்டரை வருடங்கள் சிறையில் இருந்தேன்.

அப்போது எனக்கு எதிராக நீதிமன்றத்தில் முன்னிலையான அப்போதைய பிரதி சொலிசிட்டர் ஜெனரால் 'எனது மருமகனின் வியாபாரம் தொடர்பில் நான் அறிந்திருக்க வேண்டும் ' என்று குறிப்பிட்டார்.

அவருக்கு அக்காலப்பகுதியில் உயர்நீதிமன்ற நீதியரசராக பதவி உயர்வு வழங்கப்பட்டது. இவர் தான் தற்போது ராஜபக்சர்களை பொருளாதார படுகொலையாளிகள் என்று அடையாளப்படுத்தியுள்ளார். இதனையே கர்மவினை என்பார்கள்.ராஜபக்சர்களை கர்மவினை தொடரும் எதிர்காலத்திலும் பல சம்பவங்கள் நிகழும். - என்றார். (05)



## உள்ளூராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழக்கு எண்ணை வைத்துக் கொண்டு நாடாளுமன்றத்தில் கூறுவது வெட்கக்கேடானது.

வழக்கு எண் மாறினாலும், நாட்டையே வங்குரோத் தாக்கியவர்களின்பெயர்கள்அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது, ஜனாதிபதியை நியமித்த 134 பேருக்கும் சரியாக ஒன்றை வாசித்து புரிந்து கொள்ள முடியாது,அதனை வாசித்து புரிந்து கொள்ளும் திறன் ஜனாதிபதிக்கு இருக்கிறது, எனினும்ஜனாதிபதியை நியமித்த 134 பேருக்கும் முட்டாள்தனமான திருப்தியை வழங்க அதே காரணத்தை பிடித்துக் கொண்டு கூச்சலிட்டமை வருந்தக்க விடயமாகும்.

தற்போதைய ஜனாதிபதி பிரதமராக இருந்த போது 'மஹிந்த திருடன் எமக்கு வேண்டாம்'என கூறி கத்தினாலும், திருடன் என்று அழைத்த நபருடன் பிறந்தநாள் கேக் வெட்டுவதற்குச் ஜனாதிபதி சென்றுள்ளார்.

ஜனாதிபதி தற்போது மக்கள் அபிப்பிராயம், மக்கள் ஆணையை புறம்தள்ளி, தனிப்பட்ட தேவைகளின் அடிப்படையில் முடிவுகளை எடுத்து செயற்பட்டு வருகிறார். ஜனாதிபதியின் பொறுப்புகள் பற்றி பேசினால் உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவது அவரின் பொறுப்பாகும். இவ்வாறு மக்கள் ஆணையை உரசிப்பார்க்க வாய்ப்பு கிடைக்குமாயின், கிடைக்கும் மக்கள் ஆணையின் கீழ் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி தயார் என்றார்.

## துப்பாக்கியுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கையில் சட்டவிரோதமாக பதிவுகளின்றி இடியன் துப்பாக்கி வைத்திருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொக்குளாய் கிழக்கு பகுதியிலுள்ள வீட்டிற்கு சென்ற பொலிசார் வீட்டினை சோதனை செய்த போது பதிவுகள்ஏதுமின்றிசட்டவிரோதமாக துப்பாக்கி ஒன்றை வைத்திருந்ததன் பேரிலே 32 வயதுடையவர் இடியன் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குளாய் பொலிசார் மேற்கொண்டு வருவதுடன், விசாரணைகளின் பின்னர் நாளையதினம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக மேலும் தெரிவித்தனர்.

## 3 நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 2023 நவம்பர் 20ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் கீழ்வரும் விடயங்களுக்காக மூன்று நாடாளுமன்ற ஒன்றியங்களை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் கௌரவ சஜித் பிரேமதாசவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இலங்கையில் கிரிக்கெட் விளையாட்டை மறுமலர்ச்சி பெறச் செய்வதற்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியத்தை உருவாக்குவதற்கும்,

நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி வசந்த யாப்பா பண்டார மற்றும் முறையாக 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள்வெவ்வேறாக முன்வைத்த கோரிக்கைக்கு அமைய 'மலையகப் பாதுகாப்பு' மற்றும் 'மனித உரிமைகள்' தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியங்கள் இரண்டை ஆரம்பிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




காலைக்கதிர் Kalaikkathir

# தாய்லாந்துடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் 2024ஆம் ஆண்டு பெப்ரவரி கைச்சாத்தாகும்

## ஆளும் தரப்பு எதிர்பார்ப்பு

இலங்கை - தாய்லாந்து உத்தேச சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான கலந்துரையாடலை டிசெம்பருக்குள் நிறைவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கை - தாய்லாந்து உத்தேச சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக நடத்தப்படும் கலந்துரையாடல் 2023 டிசெம்பர் மாதம் ஆகும் போது முடிவுறுத்தி 2024.02.03 ஆம் திகதி குறித்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

குறித்த கலந்துரையாடலின் 06 ஆம் மற்றும் 07 ஆம் சுற்றுக்களில் எட்டப்பட்ட உடன்பாடுகளுக்கமைய, இயைபு முறைக் குறியீடு 2022 இன் அடிப்படையில் 15 வருடங்களில் இயைபு முறைக் குறியீட்டில் 80 வீதத்தினை தளர்த்துவதற்கும், 15 - 18 வருடங்கள் வரையான காலப்பகுதியில் இயைபு முறைக் குறியீட்டில் 5 வீதத்தை பகுதியளவில் தளர்த்துவதற்கும், இயைபு முறைக் குறியீட்டின் எஞ்சிய 15 வீதத்தை மறை (-) பட்டியலில் உட்சேர்ப்பதற்கும் இயலுமாகும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இலங்கை வரித் தளர்த்தல் வேலைத்திட்டம் ஜனாதிபதியால் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது. (05)

# குடும்பத்தவரை கூலிப் படை மூலம் கொல்ல முயன்ற குற்றச்சாட்டில் சகோ, தந்தை கைது

குடும்பத்தின் இளைய சகோதரனை கொலை செய்வதற்காக அவரது மூத்த சகோதரர் 60 ஆயிரம் ரூபா கப்பம் வழங்கிய சம்பவம் ஹோமாகம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

கத்தியால் குத்தப்பட்ட இளைய சகோதரன் உட்பட இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், தந்தை, மகன் ஆகிய இருவரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் ஹோமாகம பிரதேசத்தை சேர்ந்த 64 வயதுடைய தந்தை மற்றும் 21 வயதுடைய மகன் ஆவர்.

தங்களது பெற்றோரின் சொத்துக்களை சமமாகப் பகிர்ந்தளிக்காமை காரணமாக இரு சகோதரர்களுக்கும் இடையிலான தகராறே இந்தச் சம்பவத்துக்கு காரணம் எனத் தெரிய வருகிறது.

இளைய சகோதரர் ஹோமாகம ஹிரிபிட்டிய பிரதேசத்தில் பாடசாலை உபகரண விற்பனை நிலையமொன்றை நடத்தி வரும் நிலையில் அவர் விற்பனை நிலையத்தில் இருக்கும்போது ஓட்டோவில் வந்த இனந்தெரியாத மூவர் அவரை கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளனர்.

இந்த சம்பவத்தில் அருகில் இருந்த நபர் தாக்குதலை தடுக்க முற்பட்ட போது சந்தேக நபர்கள் அவரையும் தாக்கிவிட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

இந்நிலையில் காயமடைந்த இருவரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# நாட்டின் இலத்திரனியல் ஊடகங்களுக்கு ஒழுங்கு படுத்தல் ஆணைக்குழுச் சட்டம்

## அரசாங்கம் அறிவிப்பு

இலத்திரனியல் ஊடகங்களுக்கான ஒலிஃஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுச் சட்டத்தை அறிமுகப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பேச்சுச் சுதந்திரம் மற்றும் கருத்துத்தெரிவிக்கும்சுதந்திரத்தை உரிய வகையில் பாதுகாத்து சிறந்த ஊடகத்துறையை உறுதிப்படுத்தும் நோக்கில் இலத்திரனியல்ஊடகங்களுக்கான ஒலிஃஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக சட்டமூலமொன்றை தயாரிப்பதற்காக வெகுசன ஊடக அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனை செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அங்கு, முன்மொழியப்பட்டுள்ள சட்டமூலத்தைத் தயாரிக்கும்போதுகவனம்செலுத்த வேண்டிய கொள்கை ரீதியான விடயங்கள்பற்றிபரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்புமறுசீரமைப்பு அமைச்சர் தலைமையில் அமைச்சரவை உபகுழுவொன்று உருவாக்கப்பட்டதுடன், குறித்த குழுவால்முன்மொழியப்பட்டுள்ள ஒலிஃஒளிபரப்பு ஆணைக்குழுச் சட்டமூலத்தைத் தயாரிப்பதற்கு அடிப்படையாகக் கொள்வதற்காக பொருத்தமான ஏற்பாடுகளுடன் கூடிய அடிப்படைச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த ஆரம்பவரைவின் அடிப்படையில் சட்டமூலத்தைத் தயாரிப்பதற்கு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (05)

# கோட்டை நீதிவான் நீதிமன்ற மற்றுமொரு ஊழியரும் கைது

கோட்டை நீதிவான் நீதிமன்ற பதிவாளர் விவகாரம் தொடர்பில் கோட்டை நீதிவான் நீதிமன்றத்தின் மற்றுமொரு ஊழியரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

போலி ஆவணம் தயாரித்து தண்டனை விதிக்கப்பட்ட சந்தேக நபரின் பயணத்தடையை நீக்கிய குற்றச்சாட்டில் கோட்டை நீதிவான் நீதிமன்ற பதிவாளரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# நுவரெலியாவில் மீண்டுமொரு கட்டடத்தை தனியாருக்கு குத்தகைக்கு வழங்க முடிவு

நுவரெலியாவின் எலிசபத் மாவத்தையில் அமைந்துள்ள பழைய சீ பாங்க் ரெஸ்ட் கட்டடம் மற்றும் காணியை அபிவிருத்தி செய்து பேணிச் செல்ல அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான நுவரெலியாவின் எலிசபத் மாவத்தையில் அமைந்துள்ள பழைய சீ பாங்க் ரெஸ்ட் கட்டடம் மற்றும் காணியை அபிவிருத்தி செய்து பேணிச்செல்வதற்காக தனியார் துறை முதலீட்டாளர்களிடம் போட்டி முதலீட்டு முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளன.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளை மதிப்பீடு செய்த பின்னர், அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பேச்சுக் குழுவால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் குறித்த சொத்தை 50 வருடகால குத்தகை அடிப்படையில் கொலோனியல்புரொபர்டீஸ்பிரைவெட் லிமிட்டட் நிறுவனத்துக்கு வழங்க நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (05)









# திரிபோஷா தொடர்பான தீர்மானத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது

ஆறு மாதம் தொடக்கம் மூன்று வயது வரையான பிள்ளைகளுக்கு திரிபோஷா உள்ளிட்ட மேலதிக உணவுத் திட்டத்திற்கான அப்லோடொக்சின் தடைதாண்டல் மட்டத்தைத் திருத்தம் செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

சுகாதார அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் மகப்பேறு மற்றும் சிறுவர் ஆரோக்கியம் தொடர்பான வேலைத்திட்டத்தின் கீழ் 06 மாதம் தொடக்கம் 05 வயது வரை குறைந்த போசாக்குடைய பிள்ளைகளுக்கு மேலதிக உணவாகவும், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு மேலதிகப் போசாக்குப் பதார்த்தமாக திரிபோ வழங்கப்பட்டு வருகின்றது.

ஆனாலும், 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டத்தின் கீழ் காணப்படும் ஒழுங்குவிதிகளில் விதிக்கப்பட்டுள்ள இறுக்கமான அப்லோடொக்சின் தடைதாண்டல் மட்டம் காரணமாக திரிபோஷா உற்பத்திக்குத் தேவையான சோளத்தைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் உள்ளன.

அதனால், சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அப்லோடொக்சின் மட்டமான பீ1 வகைக்கான 5 பி.பி.பீ மட்டத்தை ஒட்டுமொத்த அப்லோ டொக்சின் மட்டத்தை 10 ஆக ஏற்புடையதாக்கிக் கொள்வதற்கு சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (05)

# 'சீனா - மத்திய மாகாணம் இடையே ஒன்றிணைந்த வேலைத் திட்டம்

மத்திய மாகாணத்திற்கும் சீனாவின் ஜெயன்சி மாகாணத்திற்குமிடையே ஒன்றிணைந்த வேலைத்திட்டங்கள் பல நடைமுறைப்படுத்தப்பட உள்ளன. அதற்கான ஆரம்பக் கட்ட பணிகள் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவின் ஏற்பாட்டில் மத்திய மாகாண ஆளுநர் காரியாலயத்தில் இடம்பெற்றது. முதலீட்டு ஊக்கவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வு மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தலைமையில் ஆளுநர் காரியாலயத்தில் இடம்பெற்றது.

இதனுடன் தொடர்புடையதாக தேசிய கைத்தொழில் உற்பத்திகளின் கண்காட்சியும், சீனாவின் ஜெயன்சி மாகாணம் தொடர்பான புகைப்படக் கண்காட்சியும் இடம்பெற்றது.

சீனநாட்டு முதலீட்டாளர்களும் பலர் இதில் பங்கு கொண்டனர். ஜெயன்சி மாகாண உதவிச் செயலாளர் திருமதி சூசொன்குயிங் இங்கு கருத்துத் தெரிவிக்கஷ்யில், மத்திய மாகாணத்திற்கும் ஜெயன்சி மாகாணத்திற்கும் இடையில் நிறைய ஒற்றுமைகள் காணப்படுகின்றன எனவும் அதனூடாக வர்த்தக மற்றும் பொருளாதார விடயங்களைக் கையாள்வது மிகவும் இலகுவானது. - என்றார்.

இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம உற்பட மற்றும் பலர் உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது . (05)

# வத்தேகம பாடசாலையின் சுவர்மதில் பலத்த மழையால் இடிந்து வீழ்ந்தது



பலத்த மழை காரணமாக வத்தேகம பாலிகா கல்லூரியின் ஆரம்பப் பிரிவுக்கு அருகில் பெரிய பக்கச்சுவர் ஒன்று இடிந்து வீழ்ந்துள்ளது.

இதனையடுத்து பாடசாலை வளாகத்தை துப்புரவு செய்யும் பணியை இராணுவத்தினர் மேற்கொண்டுள்ளதுடன், மாகாண கல்வி திணைக்களத்தின் பணிப்புரையின் பேரில் செவ்வாய், புதன் பாடசாலையை மூடுவதற்கும் பாடசாலை அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்தச் சுவர் இடிந்து வீழ்ந்ததால் பாடசாலையின் கட்டட வளாகமும் சேதமடைந்துள்ளதால், எதிர்காலத்தில் ஆபத்துகள் ஏற்படுமா என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் நேரில் ஆய்வு நடத்தவுள்ளது.

வத்தேகம பிரதேசத்தில் திங்கட்கிழமை முதல் கடும் மழை பெய்துவருவதுடன் பாடசாலையின் பல கட்டடங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. (05)

# பொலிஸாரின் சித்திரவதையால் உயிரிழந்த இளைஞன் இறப்புக்கு உடன் நீதி தேவை

## பொலிஸ்மா அதிபருக்கு சிறீதரன் கடிதம்



வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கடந்த 2023.11.08 ஆம் திகதி சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு, யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த, கலைவாணி வீதி, சித்தன்கேணி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் என்னும் 26 வயது இளைஞன் பொலிஸாரின் அராஜகமான தாக்குதலால் சிறுநீரகப்பாதிப்புஏற்பட்டநிலையில் 2023.11.19 ஆம் திகதி உயிரிழந்துள்ளமை தொடர்பில் நீதியான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கோரி நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இலங்கைப் பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

பொலிஸாரின் கைது நடவடிக்கையில் தொடங்கி, மரணம் நிகழ்ந்தது வரையான சம்பவங்களைவரிசைப்படுத்தி, இளைஞனின் சாவுக்கு நீதியை வலியுறுத்திக்கோரும் அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

பொருளாதார ரீதியாக நலிவடைந்த குடும்பப் பின்னணியைச் சேர்ந்த அப்பாவி இளைஞனான அலெக்ஸ், சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுதடுத்துவைக்கப்பட்டிருந்த போதே வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் மிலேச்சத்தனமான தாக்குதல்களாலும், சித்திரவதைகளாலும் உயிரிழந்துள்ளார்.

எனினும் இதுதொடர்பிலானவிசாரணைப் பொறிமுறைகள் எவையும் இதுவரை முறையாகக் கைக்கொள்ளப்படாத நிலையில், விசாரணையின் தீவிரத் தன்மையையும், இறந்துபோன இளைஞனின் உறவுகளது கோபத்தையும் நீர்த்துப் போகச்செய்யும் வகையில், தாக்குதல் மேற்கொண்ட இரு பொலிஸாருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளமை அநியாயமாகக் கொல்லப்பட்ட ஓர் அப்பாவி உயிரின் பெறுமதியை மலினப்படுத்துவதோடு, பொலிஸ் அதிகாரத்தனத்தின் வெளிப்பாட்டை மிகக்கோரமானதாகவும் பதிவுசெய்திருக்கிறது.

எனவே, இதுவிடயத்தில் தாங்கள் உயரிய கரிசனைகொண்டு, பொலிஸார் மீதான குற்றங்களை மறைத்து விசாரணையை மடைமாற்றும் வழக்கமானதும் நீதிக்குப்புறம்பானதுமான செயற்பாடுகளைத் தவிர்த்து, இறந்துபோன இளைஞனின் உயிரை எந்தப் பிரயத்தனங்களாலும் மீட்டெடுக்க முடியாத கையறு நிலையிலுள்ள அவ் இளைஞனது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்குநீதியைப்பெற்றுக்கொடுக்கும் வகையில் முறையான விசாரணைகளை மேற்கொள்வதற்கும், உயிரிழந்தஇளைஞனின் வாக்குமூலக் காணொலி, சட்ட மருத்துவ நிபுணரின் உடற்கூற்றாய்வு அறிக்கை என்பவற்றை சான்றாதாரங்களாகக் கொண்டு இக்கொலையோடு தொடர்புடைய குற்றவாளிகளை எந்தச் சமரசங்களுமற்றுத் தண்டிப்பதற்கும், இனியொருபோதும் இத்தகைய அசம்பாவிதங்கள் மீளநிகழாமையை உறுதி செய்வதற்கும் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனத் தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன். - என்றுளது. (05)

## ஷம்மியை பாதுகாக்கும் தேவை எனக்கில்லை: நீதிபதிகளை விமர்சிப்பது கவலையளிக்கின்றது!

### ஜனாதிபதி ரணில் திட்டவட்டம்



ஷம்மி சில்வாவை பாதுகாக்க வேண்டிய தேவை எனக்கில்லை என்றும் நீதிபதிகளை விமர்சிப்பதையிட்டு கவலையடைவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கசபையில்குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற சிறப்புரிமையில் மறைந்து கொண்டு நீதிபதிகளைக் குற்றஞ்சாட்ட வேண்டாம். நாம் எமது வேலைகளைச் செய்வோம், நீதிபதிகள் அவர்களின் வேலைகளைச் செய்யட்டும். பிரச்சினைகள் இருந்தால் முறையாக பேசித் தீர்த்துக் கொள்ளலாம். நீதிபதிகளை விமர்சிப்பதையிட்டு கவலையடைகிறேன் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதேவேளை, கிரிக்கெட் விவகாரம் நீண்டகால பிரச்சினை. இரு தரப்பினருக்கும் இடையிலான மோதல்களால் பிரச்சினைகள் தீவிரமடைந்துள்ளன. சட்டத்தின் ஊடாகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு எட்டப்படும். ஷம்மி சில்வாவைப் பாதுகாக்க வேண்டிய தேவை எனக்கில்லை என்றும் கூறினார்.

அத்துடன், அரசமைப்பு பேரவை நாடாளுமன்றத்தின் ஒரு பகுதியல்ல, அதுநிறைவேற்றுத்துறை அதிகாரமுடைய ஜனாதிபதியின் விடயதானம் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது குறிப்பிட்டார். (05)

## வட்டுக்கோட்டை குறித்த சாட்சியங்களை மனித உரிமை ஆணைக்குழு பதிகின்றது!

வட்டுக்கோட்டை பொலிஸாரின் சித்திரவதையால் உயிரிழந்த இளைஞனுடன் கைதான மற்றைய இளைஞனிடம் வாக்குமூலம் பெறவுள்ளதாக மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸாரின் சித்திரவதையில் சித்தங்கேணி பகுதியைசேர்ந்தநாகராசா அலெக்ஸ் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் மனிதவுரிமை ஆணைக்குழுவின் விசாரணைகள் தொடர்பில் கேட்ட போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் -

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகிறோம். அதன்ஒருகட்டமாகசாட்சியங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

உயிரிழந்த இளைஞனுடன் கைது செய்யப்பட்ட மற்றைய இளைஞனிடம் வாக்குமூலம் பெறவுள்ளோம்.

அத்தோடு வேறு நபர்களிடமும் தேவைப்படும்பட்சத்தில் அவர்களின் வாக்குமூலங்களையும் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

உடற்கூற்று பரிசோதனையின் முழுமையான அறிக்கையும் இதுவரை எமக்கு கிடைக்கவில்லை என மேலும் தெரிவித்தார். (05)

## வட்டுக்கோட்டை இளைஞனின் சாவு அமைச்சரின் இதயத்தை வருத்துகிறது

'கடுமையான குற்றங்களைப் புரிந்த குற்றவாளிகள் கூட நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் சிறையிருந்து வெளியே வருகின்ற நிலையில், சந்தேகத்தின் பேரில் கைதான சித்தங்கேணி இளைஞன் 'நாகராஜா அலெக்ஸ்' மரணமான செய்தி எல்லோர் இதயங்களையும் வருத்துகின்றது' என ஈழ மக்கள் ஜனநாயக்கட்சிசெயலாளர்நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள இரங்கல் அறிக்கையில் -

சந்தேகத்தின் பேரில் கைதான ஒருவர் முழுமையான நீதி விசாரணைக்கு முன்பாகவே மரணத்தைத் தழுவியுள்ளார். இது நடந்திருக்கவே கூடாத கொடிய துயர் நிகழ்வு.

இது குறித்த விசாரணைகள் நடந்து வருகின்றன. உண்மைகள் கண்டறியப்பட்டு நியாயங்கள் உணர்த்தப்பட வேண்டும்.

மரணமடைந்த இளைஞனின் குடும்பத்தவர்கள் படும் இழப்பின் வலிகளில் பங்கெடுக்கின்றேன். ஆறுதலும் ஆழ்மன அஞ்சலியும்! - இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (05)




## பொலிஸாரின் தாக்குதலில் பலியான இளைஞனுக்கு நீதி வழங்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்

### ஈ.பி.டி.பியின் ஊடகப் பேச்சாளர் ரங்கன் உறுதி

யாழ்ப்பாணத்தில் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி உயிரிழந்தமை தொடர்பில் அவரது குடும்பத்தினருக்கு உரியநீதிவழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஈழ மக்கள்ஜனநாயகக்கட்சியின் ஊடகப் பேச்சாளரும், யாழ்ப்பாண மாவட்ட உதவி நிர்வாகச் செயலாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில்ஊடகசந்திப்பொன்றை மேற்கொண்ட ஸ்ரீரங்கேஸ்வரன் மேலும் கூறுகையில் -

எமதுகட்சியின்தலைவர்டக்ளஸ் தேவானந்தா மூத்த அமைச்சர் என்ற வகையிலும், யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின்இணைத் தலைவர் என்ற வகையிலும் இதற்கான நடவடிக்கைகளை எடுப்பார். - என்றார்.

அண்மையில்பருத்தித்துறையில் இந்திய மீனவர்கள் 22 பேர் கடற்படையினரால்கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்படாமல் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பிய போது -

இலங்கை நாட்டு எல்லைக்குள் படகுகள்வருவதைகடத்தல்நோக்கம் மற்றும் இயந்திர கோளாறு என இரு வகையாக பார்க்க வேண்டும்.

இந்திய மீனவர்களுடைய படகுகளின்இயந்திரமும்செயலிழந்தே இலங்கை கரையில் ஒதுங்கியது. இதனால் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அந்த வகையில் கடற்படையினரால் படகு செயலிழந்தது உறுதிப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், குறித்த விடயம் இந்திய மீனவர்களால் இந்திய அமைச்சருக்கு தெரிவிக்கப்பட்டு தூதரகம் ஊடாக மனிதாபிமான அடிப்படையில் இந்திய மீனவர்கள் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர். - என்றார். (05)


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN
EASILY
BOOK
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# வெளிநாட்டுக் கொள்கை குறித்து அரசு கவனம் செலுத்த வேண்டும்

## அன்ரனி யேசுதாசன் சுட்டிக்காட்டு



'வெளிநாட்டுக் கொள்கை குறித்து இலங்கை அரசு அதிகமான கவனத்தை செலுத்த வேண்டும்' என தேசிய அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய ஏற்பட்டாளர் அன்ரனி யேசுதாசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

சர்வதேச மீனவர் தினத்தில் மீனவர்களுக்கு எங்களுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கையைப் பொறுத்த வரையில் இன்றைய மீனவர் தினத்தை கொண்டாடுவதற்கு மீனவர்களால் முடியுமா? சந்தோஷமாக அவர்களால் கொண்டாட முடியுமா என்கின்ற ஒரு கேள்வி எழுகின்றது.

ஏனெனில் அரசாங்கம் கொண்டு வந்துள்ள மீனவர்களுக்கான சட்டம் சிறு மீனவர்களுடையவாழ்வைபாதிக்கின்றது.

அவர்களுடைய தொழிலை இல்லாது செய்கின்ற, அவர்களுடைய வளங்களை பாதிக்கின்ற, வளங்களை சூறையாடுகின்ற ஒரு சட்டமாக அது இருக்கின்றது.

இந்தச் சட்டம் தொடர்பாக அமைச்சர் டக்லஸ் தேவானந்தா உட்பட, ராஜாங்க அமைச்சர் உட்பட அரசு இதைக் கவனத்தில் கொண்டு மீனவர்களோடு கலந்துரையாடி உடனடி மறுசீரமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அத்துடன் அரசு இந்த வெளிநாட்டு கொள்கை தொடர்பாக அதிகமான கவனத்தை செலுத்த வேண்டும், அதே நேரம் வடக்கு கிழக்கு பகுதியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவருடைய அநேகமான காணிகள் இராணுவமயமாக்கப்பட்ட நிலையில் இருக்கின்றன. மீனவர்கள்சுதந்திரமாக மீன்பிடிக்க முடியாத நிலையில்இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும். காணிகள் விடுவிக்கப்பட வேண்டும்.

1990 ஆம் ஆண்டிலிருந்து இடம்பெயர்ந்து வாழுகின்ற அநேக மக்களுடைய காணிகள் இன்ன மும் விடுவிக்கப்படாது இருக்கின்றன. இந்தக் காணிக்களும் விடுவிக்கப்பட வேண்டும் என இன்றைய நாளிலே நாங்கள் கூறிக் கொள்ள விரும்புகின்றோம். - இவ்வாறு அன்ரனி யேசுதாசன் தெரிவித்துள்ளார்.

(05);







# கொக்கேயின், மரிஜுவானா போதை அமெரிக்காவிலிருந்து வந்து சிக்கின

ஆறு கோடியே அறுபத்து ஒன்பது லட்சத்து நாற்பதாயிரம் ரூபா பெறுமதியான கொக்கேயின் மற்றும் மரிஜுவானா போதைப்பொருள் என்பன செவ்வாய்க்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளன.

அமெரிக்காவிலிருந்து விமான அஞ்சல் பொதியாக கம்பஹா பிரதேசத்தில் உள்ள முகவரி ஒன்றுக்கு இந்தப் போதைப்பொருள் முகவரியிடப்பட்டிருந்தது.

இந்தப் பொதியை சுங்க அதிகாரிகள் சோதனையிட்ட போது 5 கிலோ 161 கிராம் மரிஜுவானா மற்றும் 511 கிராம் கொக்கேயின் என்பன கண்டுபிடிக்கப்பட்டன.

உணவு பெட்டி ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சுங்க அதிகாரிகளால் இவை கண்டுபிடிக்கப்பட்டன.

குறித்த பொதி அனுபப்பட்ட முகவரியைச் சேர்ந்த பெண்ணின் அனுமதியுடன் பொதியை எடுத்துச் செல்லவந்தகொழும்புவெல்லம்பிட்டிய பிரதேசத்தைச்சேர்ந்த 46 வயதுடைய நபர்ஒருவரும்வெளிநாட்டுஇறக்குமதிப் பொருள்களைக் களஞ்சியப்படுத்தும் களஞ்சியம் ஒன்றில் பணிபுரியும் அதிகாரி ஒருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைபொலிஸ்போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மின்சார வேலியில் சிக்கி கொம்பன் யானை இறப்பு

முல்லைத்தீவு, ஒட்டி சுட்டான் பெரிய சாளம்பன் கிராமத்தில், மின்சார வேலியில் சிக்குண்டு கொம்பன் யானையொன்று உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளதாகவும் ,சுமார் 15 வயது மதிக் கத்தக்க யானையே இவ்வாறு உயிரிழந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மின்சார வேலையை இணைப்புச்செய்தகாணியின்உரிமையாளர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனவும், இது குறித்த மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சாளம்பன் கிராமத்தில் காட்டு யானையால் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுவருவதாகவும், யானையால் உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதாகவும், மக்கள் கவலை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# பாலியல் கல்வி குறித்து கல்வி அமைச்சர் கருத்து

பாடசாலைகளில் பாலியல் கல்வியை அறிமுகப்படுத்துவது பொருத்தமற்றது என சிலர் வாதிடுகின்றனர் எனவும், அது மிகவும் பொருத்தமான வகையில் பாடசாலை பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டுமெனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் கல்வி சீர்திருத்த நடவடிக்கைகளில் அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்

நவம்பர் 19 ஆம் திகதி இடம்பெற்ற சிறுவர் துஷ்பிரயோகம் தடுப்பு தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

உலகின் பல வளர்ந்த நாடுகளில் கூட இணைய பாவனை கட்டுப்பாடுகளுடன் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும், டிஜிற்றல் தொழில்நுட்பத்தை துஷ்பிரயோகம் செய்வதால் சிறுவர் துஷ்பிரயோகம் உட்பட பல சமூக பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன எனவும் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகளுக்கு மத்தியில், தற்போதைய சமூகம் இடைவிடாத போட்டியில் உள்ளது, மேலும்போட்டியின்தன்மைசாதனைக்காக பாடுபடுவதால், ஒரு தலைமுறை மன அழுத்தத்திலும் இருப்பதைக் காண்கிறோம். எனவே இது அவசியம். எதிர்கால பயிற்சித் திட்டங்களில் மனநல மருத்துவத் துறையில் அதிக கவனம் செலுத்துங்கள் என்றும் அமைச்சர் இங்கு மேலும் சுட்டிக்காட்டினார். (05)

# அரசமைப்பு சபை உறுப்பினர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை

## சுமந்திரன் சுட்டிக்காட்டு



அரசமைப்புசபையில் 10 உறுப்பினர்களும் நியமிக்கப்படாமல் வெற்றிடமாக உள்ளமையை நாடாளுமன்றில் கவனத்திற்கு சுமந்திரன் கொண்டுவந்திருந்தார்.

அரசமைப்பு சபை உறுப்பினருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனின் பெயர் முன்மொழியப்பட்ட போதும் இதுவரை நியமனம் வழங்கப்படவில்லை என சுட்டிக்காட்டினார்.

இந்த விடயம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் நாடாளுமன்றத்திலும் கட்சித் தலைவர் கூட்டத்திலும் அதை சுட்டிக்காட்டியிருந்தார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு என கூறும் அரசாங்கம் இந்த விடயத்தில் கூட எவ்வித நடவடிக்கையும் எடுக்காதமை குறித்து சுமந்திரன் ஆதங்கம் வெளியிட்டிருந்தார். (05)



# கொக்குத் தொடுவாய் மனித புதைக்குழி 19 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மீட்பு

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைக்குழியின் அகழ்வு பணியானது மீள ஆரம்பிக்கப்பட்டு நேற்று (புதன்கிழமை) மூன்றாவது நாளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில், முல்லைத்தீவு மாவட்ட சட்டவைத்திய அதிகாரி க.வாசுதேவ, தடயவியல் பொலிஸார், கிராம சேவையாளர் ஆகியோரின் பங்கேற்புடன், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் குறித்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

செவ்வாய்க்கிழமை அகழ்வாய்வு நிறைவடையும் போது இரு மனித எலும்புக்கூட்டு தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டிருந்தன. இதன்போது குறித்த எலும்புக்கூட்டு உடற்பகுதியில் இருந்து துப்பாக்கி சன்னங்கள், குண்டு சிதறல்கள் மற்றும் விடுதலைப்புலிகளின் இலக்க தகடு ஆகியன எடுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில்'எதிர்வரும் 24அம் திகதி வெள்ளிக்கிழமை களனி பல்கலைக்கழக தொல்பொருள் பீடத்தினரால் விடேஸ்கான் இயந்திரம் மூலம் இவ் மனித புதைகுழியானது எவ்வளவு தூரம் வியாபித்து இருக்கின்றது?உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து ஆய்வு நடத்தப்படவுள்ளதாக' முல்லைத்தீவு மாவட்ட விடே சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்திருந்தார். (05)

# நாடாளுமன்ற நடவடிக்கைகளில் கலந்துகொள்ள சனத்துக்கு தடை

இராஜாங்க அமைச்சர் சனத் நிாந்த சபை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள தடைவிதிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார். இராஜாங்க அமைச்சர் சனத் நிாந்தவுக்கு இருவாரங்களுக்கு சபை நடவக்கைகளில் கலந்துகொள்ளத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மேலும் குறிப்பிட்டார்.

பொருளாதார பாதிப்புக்கு பொறுப்புக்கூறவேண்டியவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கை என்ன ? என்று எதிர்கட்சித் தலைவர் 27- 2 கீழ் செவ்வாய்க்கிழமை எழுப்பிய கேள்விக்கு ஆளும் தரப்பினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

தகாத வார்த்தைகளை பிரயோகித்து ஆளும் தரப்பினர் சபை நடுவில் வந்து எதிர்க்கட்சித் தலைவரின் உரைக்கு கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இதன்போது இராஜாங்க அமைச்சர் சனத் நிாந்த, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உரையாற்றிக்கொண்டிருக்கையில் அவரது பத்திரத்தை பறித்தொடுத்துச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.11.2023இல் வெளியிடப்பெற்றது.